# கொய்சியோங் (Guiqiong)

**வசிப்பிடம்:** கி.பி.1983 ன் ஓர் ஆய்வு 7,000 கொய்சியோங் மக்கள் சீனாவில் உள்ளதாகக் காட்டியது. தாதோ நதியின் இருபுறங்களில் பீடபூமிகளில் மேற்கு சிசுவான் மாநிலத்திலுள்ள கர்செ (Garze) திபெத்திய தன்னாட்சிப் பகுதியில் லுதிங் மாவட்டத்தின் வடபகுதியில் இவர்கள் வசிக்கின்றனர். தியன்சுஅன் (Tianquan) மாவட்டத்தின் வடமேற்குப் பகுதிகளில் இன்னும் கொஞ்சம் கொய்சியோங் மக்கள் வசிக்கின்றனர். மிகப்பெரிய தாதோ நதி கோடைக்காலத்தில் பனிமலைகள் உருகும்போது வெள்ளப் பெருக்கெடுத்து ஓடுகிறது, இந்நதியே இம்மக்களின் வாழ்வாதாரமாகும். இந்நதி மலைப் பாங்கான மேற்கு சிசுவான் பகுதியைக் குடைந்து வழியை உண்டாக்கியுள்ளது. இதன் விளைவாக நதியின் இருபுறங்களிலும் பீடபூமிகள் உருவாகியுள்ளன.




**அடையாளம்:** கொய்சியோங் மக்கள் அதிகாரப்பூர்வமாகத் திபெத்தியர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். அநேக ஆண்டுகளுக்கு முன், கி.பி. 1930 லிலேயே சீன ஆராய்ச்சியாளர்கள் “இவர்களது மொழி மற்றும் பழக்கவழக்கங்கள் சீனர் மற்றும் கம்பா திபெத்தியர்களிடத்திலிருந்து வித்தியாசமானது என்றும் இவர்கள் ஒரு தனித்தன்மையான இனமாவார்கள்” என்றும் கண்டறிந்திருந்தனர்.

**மொழி:** கொய்சியோங் மொழி திபெத்திய-பர்மிய மொழிப் பிரிவின் கிளையான ஷியங் பிரிவைச் சேர்ந்தது. மொழியியலாளர் சுன் ஹாங்கை கூறுகிறார் “ கொய்சியோங் மக்கள் சிறு சிறு குழுக்களாகப் பெரிய சீனச் சமுதாயங்களுக்கிடையில் வசிக்கின்றனர். கொய்சியோங் மொழி சீன மொழியின் பலத்த ஆதிக்கத்துக்குள்ளாகி அதன் அநேக வார்த்தைகளைக் கடனாகப் பெற்றுள்ளது.”

**வரலாறு:** வரலாற்றுக்குரிய திபெத்திய-சீன எல்லைப் பகுதியில் ஜாதிகள் ஒன்றிணைவது மற்றும் ஒரு ஜாதியின் கலாச்சாரம் மற்றொரு ஜாதிக்குள் கடந்துசெல்வது போன்ற நிகழ்வுகள் அநேக ஜாதிகளுக்கிடையில் நடந்திருக்கின்றன. கொய்சியோங் மக்கள் இப்பொழுது வாழும் பகுதி முந்தைய நாள்களில் ஷிகாங்(Xikang) மாநிலத்தைச் சேர்ந்ததாகும். கி.பி. 1930 களில் சிலர் மட்டுமே பிரவேசிக்கத் துணிய தக்கதாக, ஷிகாங் ஒரு சட்ட ஒழுங்கற்ற இடமாயிருந்தது . “பழங்குடியினர் (ஆதிவாசிகள்) இங்கு வரும் அந்நிய தேசத்தாரைப் பிடித்துக் கொன்றுவிடுகின்றனர். ஷிகாங்கின் பகுதிகளில் கொள்ளையின் நிமித்தம் கைவிடப்பட்ட குடிசைகள் மற்றும் தரிசுநிலங்களைப் பார்ப்பது சாதாரணமானக் காட்சியாகும். சமுதாயங்களின்மேல் பழங்குடியினரின் கொடூரமான தாக்குதல் மற்றும் அதற்குப் பதில் கொடுக்கும் அரசாங்கத்தின் தண்டனைகள் நிமித்தம் பத்தாயிரக்கணக்கான உயிர்கள் அழிந்தன.”

**பழக்கவழக்கங்கள்:** கி.பி.1930 லிருந்து கி.பி.1940 வரையிலான வருடங்களில் ஷிகாங் பகுதியில் நடந்த வன்முறைக்கு முக்கியக் காரணம் போதைப்பொருட்களின் வியாபாரமாகும். கி.பி.1950 ல் கம்யூனிஸ்ட்டுகள் இப்பகுதியைக் கைப்பற்றும்வரை அபினி (Opium) மிக அதிக அளவில் இங்கு உற்பத்திசெய்யப்பட்டது. புதிய அரசாங்கம் அபினி சாகுபடியை அழிக்கக் கட்டாயப்படுத்தியது. இந்நாள்களில் பெரும்பாலான கொய்சியோங் மக்கள் மக்காச்சோளம் மற்றும் வாற்கோதுமை சாகுபடி செய்கின்றனர், நதியோரங்களில் வசிப்போர் காய்கறி சாகுபடி செய்கின்றனர் .

**கிறிஸ்துவம்:** கொய்சியோங் மக்கள் பெயரளவு திபெத்திய புத்தமதத்தினர். இவர்களுக்குச் சுவிசேஷத்தைப்பற்றியோ இயேசு கிறிஸ்துவைப் பற்றியோ எதுவும் தெரியாது. நித்திய ஜீவனைப் பற்றிய சுவிசேஷத்திலிருந்து பல நூற்றாண்டுகளாக ஒதுக்கப்பட்டுள்ளனர். கொய்சியோங் போன்ற இனங்களைச் சந்திக்கத் தேவையான விடாமுயற்சியைக்குறித்து ஜேம்ஸ் ஒ ப்ரேசர் இவ்வாறு கூறுகிறார் “பணித்தளத்தில் சுவிசேஷ ஊழியம் என்பது இருளான ஈரமான பள்ளத்தாக்கில் ஒரு மனிதன் எரிகிற தீக்கட்டையைக் கையில் பிடித்துக்கொண்டு பற்றவைக்கக்கூடியவற்றைத் தேடிப் போவதைப் போலாகும்..... பற்றவைத்தத் தீக்கட்டையும் அதைக் கொண்டுவந்த மனிதனும் கடந்து சென்று நீண்டகாலம் ஆன பிறகு இங்கே ஒரு புதர், அங்கே ஒரு மரம், இங்கே சில குச்சிகள், அங்கே சில வறண்ட இலைகள் எனப் பற்றி எரிந்து வெளிச்சத்தையும் வெதுவெதுப்பையும் தருகின்றன.”




**Population:**
9,760 (2000)
12,020 (2010)
14,800 (2020)
**Countries:** China
**Buddhism:** Tibetan
**Christians:** none known

**மேலோட்டம்:**

**மற்ற பெயர்கள்:** Guichong

**மக்கள்தொகை:** 7,000 in China (1983, Sun Hongkai)

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, தன்குத்-ஷியாங், ஷியங் மொழி

**மொழி வழக்குகள்:** 0

**திபெத்திய புத்தமதம்:** 100%

**கிறிஸ்துவம்:** 0%

**வேதாகமம்:** இல்லை

**இயேசு திரைப்படம்:** இல்லை

**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** இல்லை

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL **குறியீடு** : GOI

**கிறிஸ்துவத்தின் நிலை**

